படிமுறைத்தமிழ் ஒன்றியம் சு .இ ______

Padimurai Tamil Federation

# தமிழ்த்திறன் தேர்வு 2025 வளர்நிலை - Level – 10

## பகுதி – 02

**1. பின்வரும் கட்டுரையைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

### கனி இருப்பக் காய்கவர்தல்!

காய் வன்மையாகவும், கனி மென்மையாகவும் இருப்பது இயற்கையின் நியதி. இன்சொல் இனிப்பதும், வன்சொல் வருத்துவதும் மனித உளம் அறிந்த செய்தி!

அடுத்த வீட்டுக் குழந்தை தன்னோடு 'பழம்' விடுவதை விரும்பும் சிறுவன் அதே நேரத்தில், எதிர் வீட்டுக் குழந்தையோடு 'காய்' விட்டுக் கொண்டிருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதனாலும் வயது வந்த பெரியோர்களும், தம்மளவில் இன்சொல் விரும்பும் அதே நேரத்தில் பிறர் முன் வன்சொல் வழங்குவதை வள்ளுவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை! ஆழ்ந்து நம்மைச் சிந்திக்கத் தூண்டும் வகையில், வள்ளுவர்

**'இன்சொல் இனி தீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.'**

பொருள் - இனிய சொல்லால் நல்ல பயன் கிட்டுகிறது என்பதை உணர்ந்திருந்தும் மனிதன், தீமையைத் தரும் கடினச் சொல்லை எதற்காகப் பயன்படுத்துகிறானோ புரியவில்லை!

**'இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக்**
**காய் கவர்ந் தற்று.'**

என்னும் இரு குறட்பாவினையும் அருள்கிறார்.
ஆம், இனிய சொல் உளத்தே இருப்பவும், அதனை வெளிப்படுத்த விரும்பாது, இன்னாச் சொல் தேடி எடுத்து வீசும் பேதைமைக்கு ஓர் ஒப்பிலா உவமையாகக் கனி கையில் இருப்பக் காய் தேடிப் பறிக்கும் ஒரு பேதைமையைத் தானே கூற முடியும்?

இன்சொல் கூறுவது எளிது. ஆனால், பெறும் பயனோ மிகவும் பெரிது. விலகி நின்று வெங்கதிர் பொழியும் ஞாயிற்றுக்குப் பொங்காத நம் பெருங்கடல் அணுகி வந்து தண்கதிர் வீசும் திங்களுக்குப் பொங்கி எழுவதைக் கண்டு வியந்து போற்றுகிறார் பெரும்புலவர் சிவப்பிரகாசர்.

**‘இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்**
**வன்சொலால் என்றும் மகிழாதே - பொன்செய்**
**அதிர்வளையாய்ப் பொங்காது அழல்கதிரால் தண்ணென்**
**கதிர்வரவால் பொங்கும் கடல்.’**

இவ்வாறு இயற்கையோடு ஒப்பு நோக்கி உலகைத் தன்னெறிப்படுத்துகிறார்.

அன்பு கலந்த வஞ்சனை இல்லாத சொல்லே இன்சொல் அதனைத் தேர்ந்து கூறுகிறவர் செம்பொருள் கண்டவராக அனைவராலும் போற்றப் பெறுவர்.

அகம் உவந்து கொடுப்பதற்குப் பொருள் இல்லாதாரும் முகமலர்ந்து இன்சொல் வழங்கி இனிது வாழலாம். உள்ளத்தில் பணிவும், உரையாடலில் இன்சொல்லும் மக்களுக்கான மதிப்புமிகு அணிகலன்கள்.

நன்மை பயக்கும் நற்சொற்களை இனிது பேச தாழ்வு நீங்கிப் புகழ் பெருகும். வாட்டுகின்ற வறுமையும், யாரிடமும் இன்சொல் வழங்குவோரிடம் விட்டு விலகிச் சென்றுவிடும்.

இந்த உண்மைகளை அறிஞர்கள் அவ்வப்பொழுது அறிவுறுத்தி வரும் நிலையிலும், ஒருவன் அறம் பயக்கும் இனியசொல் விடுத்துச் சமநிலை பிறழ்ந்து தீமை பயக்கும் இன்னாச்சொல் வழங்குவதற்கு என்ன விளக்கத்தை நாம் கூற முடியும்? இனிய சொற்கோவை இருப்பவும் இன்னாச்சொற் பட்டியலைப் பேசிப் பெருக்குவது கையில் கனி இருப்பக் கவர்கிளை தாவிக் காய்கவர்வது போன்றதோர் ஒவ்வாச் செயல்தானே? இங்கு, ‘கனி இருப்ப’ என்றால் தன்னளவில் முதிர்ந்து காம்பிலிருந்து விடுப்பட்டு, பழம் நம்முன் தாழ்ந்துறும் உண்மையினையும். ‘காய்கவர்தல்’ என்பதால் அரிதின் முயன்று காயினைப் பறித்தாக வேண்டிய உண்மையினையும் வண்டமிழ் வரிகளிடையே வள்ளுவர் ஒளிரச் செய்துள்ளமை காண நாம் உவகைக் கடலுள் ஆழ்கின்றோம்!

வினா: -

1.1 இன்சொல் பேசாது வன்சொல் பேசுவதை எவற்றோடு வள்ளுவர் ஒப்பிடுகிறார்?

1.2 பெரும்புலவர் சிவப்பிரகாசர் இன்சொல்லின் வலிமையை எவ்வாறு விளக்குகிறார்?

1.3. ‘இன்சொல்’ என்றால் என்ன?

1.4. மக்களுக்கான அணிகலங்கள் எவை?

**2. பின்வரும் சொற்களுக்கான பொருளை விளக்குக.**

1. வன்மை
2. பேதமை
3. ஒப்பில்லா உவமை
4. வெண்கதிர்

5. வண்டமிழ் ________________

6. காய்கவர்தல் ________________

7. தண்கதிர் ________________

8. வஞ்சனை ________________

9. அகம்உவந்து ________________

10. கவர்தல் ________________

11. சொற்கோவை ________________

12. செம்பொருள் ________________

**3. அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்களைத் தக்கவாறு மாற்றி வாக்கியத்தை நிறைவு செய்க.**

1. காட்டில் வாழும் பறவை ________________ அழகானது மயில் **(இனங்கள்)**.

2. தமிழர் ________________ பூக்களில் நறுமணம் கொண்டது மல்லிகை **(போற்று)**.

3. ஒழுக்கத்தை உயிரினும் பெரிதாகக் ________________ நற்குணங்களில் ஒன்று. **(கருது)**

4. உழைக்க அஞ்சும் மக்களால் ஒரு நாட்டை ________________ முடியாது. **(முன்னேறு)**

5. ஆசிரியரின் அறிவுரை ________________ மனமாற்றத்தை உண்டாக்கியது. **(மாணவர்)**

6. நாகரிகம் வளர வளர மக்கள் தொகையும் உறைவிடத் தேவையும்

__________________________ **(வளர்)**

7. சிறந்த அரசர்கள் மக்களுக்குத் தொண்டு செய்வதையே தங்கள்

____________________ பயனாகக் கருதினர். **(வாழ்)**

8. பல மாணவர்கள் தேர்வு நெருங்கும் போதுதான் காலத்தின் அருமையைப் ____________________ **(புரிதல்)**

9. கிராமிய நடனங்கள் தமிழர்களின் கலாசாரத்தையும் பாரம்பரியப் பழக்க வழக்கங்களையும் ____________________ **(வெளிப்பாடு)**

10. நேற்றுத் திருமண வீட்டிற்கு வந்த கலைவாணி பட்டாடை

____________________ **(உடு)**

**4. வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ள சொற்களுக்குரிய பொருளை எழுதுக.**

1. அமைச்சர் தம் உரையைப் படித்த பிறகு கூட்டத்தினர் எழுப்பிய **<u>ஐயங்களை</u>** தெளிவுபடுத்தினர்.

____________________________________________________________

2. நாம் நம் உடல் நலத்தைப் **<u>பேணிக்</u>** காக்க வேண்டும்.

____________________________________________________________

3. முயன்றால் எதையும் சாதிக்க **<u>இயலும்</u>.**

____________________________________________________________

4. உடல் **<u>பருமனாக</u>** இருப்பது சிறந்தது அல்ல

---

5. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் **<u>நாட்டம்</u>** கொண்டது எங்கள் அரசு.

---

6. அரிய செயல்களைச் செய்ய உடல் **<u>வலிமையை</u>** வடை மன வலிமையே தேவை.

---

7. நீதி நூல்களிலே திருக்குறள் ஓர் **<u>அரிய</u>** நூலாகும்.

---

8. வாழ்வில் வெற்றி பெற மாணவர்கள் கல்வியில் **<u>அக்கறை</u>** காட்ட வேண்டும்

---

9. உலகில் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் **<u>அமைதியை</u>** நாடி அலைகின்றனர்.

---

10. நல்ல நூல்களைக் கற்க வேண்டும். அது ஒருவரது வாழ்கையில் **<u>தளர்ச்சி</u>** வரும் போது ஊன்று கோலாக உதவும்.

---

**05. மகாகவி வாழ்ந்த, மக்கள் சமுதாயத்தில் நிலவிய சமூக முரண்பாடுகள் முதல் பலதரப்பட்ட மக்களது வாழ்வியலையும் அழகுபட, உணர்ச்சி பொங்க, அம்மக்களின் மனநிலையை, உணர்வினை, அவர் கவிதைகள் வெளிக்காட்டி நிற்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக யாழ் விவசாயிகளின் வாழ்வினை அவர் வாயிலாக 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்னும் கவிதை வழிகாணலாம்.**

மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது ஏர்
ஏறாது காளை இழுக்காது எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன்விளைவிப்பான் என்னூரான்
ஆழத்து நீருக்ககழ்வான் அவன் நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான் ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்தது பார் நள்நெல்லு
தங்கநகைகள் தலைக்கணிந்த பெண்களே
கூடிக் குனிந்து கும்மி கொட்டுவதும் காதினிக்கப்
பாடிக் கவலை பறக்கச் செய்கின்றதும் போல்
முற்றி மனிதன் முயற்சிக்கு இறை கொடுக்கும்
பொற்காசாம் நெல்லுப் பொதி சுமந்து கூத்தாடும்
அந்தப் பயிரின் அழகை அளந்தெழுத
எந்தச் சொல் உண்டாம் எமக்கு? அவ்வுழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான் ஒரு கதிரைக் கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான் கிறுகிறுத்துப் போகின்றான்.

வாடும் வயலுக்கு வார்க்கா முகில் கதிர்கள்
சூடும் சிறுபயிர்மேல் 'சோ' வென்று நள்ளிரவிற்
கொட்டும் உடன் கூடும் கொலைக்காற்றும் தானுமாய
எட்டுத் திசையும் நடுங்க முழங்கி எழும்
ஆட்டத்து மங்கையர்போல் அங்கு மொய்த்து நின்ற பயிர்
பாட்டத்தின் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய்விடவே
கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று - பின்னர் அது
வற்றியதும் ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி
பற்றி, அதோ பார் பழையபடி கிண்டுகிறாள்
சேர்த்தவற்றை முற்றும் சிதறவைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்
ஈண்டு முதலில் இருந்து முன்னேறுதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு.

**1. யாழ்பாண விவசாயிகளின் வாழ்க்கையையும் மனநிலையையும், சூழலையும் மகாகவியின் பாடலில் இருந்து விளங்கியவாறு எழுதுக.**

**06. மொழி மாற்றம்**

1. அமைதி ____________________
2. அகம் ____________________
3. பெருமை ____________________
4. இலக்கியம் ____________________
5. மொழி ____________________
6. போராட்டம் ____________________
7. வேங்கை ____________________
8. மானம் ____________________
9. சமுத்திரம் ____________________
10. வினை ____________________
11. Society ____________________
12. Family ____________________
13. Kingdom ____________________
14. Parliament ____________________
15. Immigration ____________________
16. Oppose ____________________
17. Sound ____________________
18. Sun ____________________
19. Fire ____________________
20. World ____________________

**07. பின்வரும் குறள்களுக்குப் பொருள் தருக?**

1. கற்க கசடு அற கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

2. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

3. நன்றிக்கு வித்து ஆகும் நல்லொழுக்கம் தீ ஒழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

**08. பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.**

1. பெற்றோரைப் பேணுதல்
2. தமிழ் மொழி
3. தைப்பொங்கல்
4. பனிக்காலம்
5. உண்மையான கல்வி
6. தொல்காப்பியம்